செய்தி வெளியீடு எண்: 392 நாள் : 22.07.2013

இச் சமூகத்தில் குழந்தைகளுக்கு பாதுகாப்புக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தி அவர்களை பொறுப்புள்ள பிரஜைகளாக உருவாக்கிட ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம் ஒன்று சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் மூலம் பல்வேறு சமூக நல கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட உள்ளது. அதில் ஒரு பகுதியாக சமூக நல இயக்ககத்தின் மாநில தத்து வள ஆதார மையம் (State Adoption Resource Agency )ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் உள்நாட்டு தத்தெடுத்தல் மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தல் நெறிமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில தத்து வள ஆதார மையத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களுக்கான பதவிக்கு தொகுப்பூதியத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிப்புரிய விண்ணப்பங்கள் வரவேற்கபடுகிறது,

| | |
|---|---|
| Programme Manager-1 | ரூ20,000/– ஒரு மாதத்திற்கு |
| Programme Officer-1 | ரூ15,000/– ஒரு மாதத்திற்கு |
| Accountant-1 | ரூ 8,000/– ஒரு மாதத்திற்கு |
| Programme Assistant-1 | ரூ 5,000/– ஒரு மாதத்திற்கு |

இப்பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் கல்வி தகுதி, வயது போன்ற கூடுதல் விபரங்கள் சமூக நலத்துறையின் www.tn.gov.in (Social Welfare & Nutritious Meal Programme Department) என்ற இணையதளத்தில் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த 25–45

வயதிற்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலரும், புகைப்படத்துடன்(Pass port Size) கூடிய அடிப்படை குறிப்புகளுடன் (Bio-data) சமூக நல இயக்ககம், சிந்தாதிரிபேட்டை சென்னை–2 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் (Pass port Size) 20.08.2013.–ற்குள் மாலை 5.30ற்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் படி அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சமூக நல இயக்குநர்,
சமூக நல இயக்ககம்,
எண் 58 அருணாச்சலம் தெரு ,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2

விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள், அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்படாத/முழுமையாக பூர்த்தி செய்யப்படாத/தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இப்பணியிடங்களுக்கான தேர்வு, தகுதி மற்றும் முன் அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே பரிசீலனை செய்யப்படும். மேலும், தேர்வு குழுவின் முடிவே இறுதியானது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9